# The Tamil Zenana & School Magazine.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol. XVII | Madras August & Septem. 1915. | Nos 8 & 9
புத்தகம் 17 | சென்னை ஆகஸ்டு—செப்டம்பர்மீ 1915ஞு. | இலக்கம் 8&9


## Life of Queen Alexandra.
## அலக்ஸாண்டரா மகா ராணியார்.

அலக்ஸாண்டரா மகாராணியாரின் சரித்திரத்தை நமது தேசத்தி
லுள்ள மாதர்களும் பிள்ளைகளும் நன்கறியும்பொருட்டு பிரசுரிக்கலாயி
னோம். ஸ்திரீகளும் பிள்ளைகளும் இதைநன்றாய் வாசித்து அவர்க
ளுடைய குணாதிசயங்களைப் பின்பற்றிநடப்பார்களாக.

---

### ஜனனமும் இளமைப் பருவமும்.

அலெக்ஸாண்டரா மகாராணியார் அவர்கள் டென்மார்க் தேசத்து
அரசராகிய பிரின்ஸ் கிறிஸ்டியனுடைய செல்வக்குமாரத்தியாய் 1844-வது
வருஷத்தில் டிசம்பர்மீ முதல்தேதியன்று கோபன் ஏகன் என்ற பட்ட
ணத்தில் ஜனித்தார்கள். இவர்களுடைய தாயார் லூயிஸ் என்பவள்
மிகுந்த சாமர்த்தியமுள்ள இராஜவம்ஸத்தைச் சேர்ந்தவள். இவளுக்கு பல
பாஷைகளிற் பயிற்சியுண்டு. சங்கீதம் நன்றாகத் தெரியும் சித்திரம்
எழுதுவதில் மிகத்தேர்ந்தவள். பிரின்ஸ் கிறிஸ்டியனும், லூயிஸும்
வெகு சாமானியமாய் குடித்தனம் செய்துகொண்டு வந்தார்கள். இவ்
வித குணங்களமைந்துள்ளவர்களின் புத்திரிதான் நமது அலெக்ஸாண்டரா
மகாராணியார் இவர்களுடைய தாயாரும் தகப்பனாரும் அதிக செல்வ
மாக இவரை வளர்த்து கல்வி புகட்டிவந்தார்கள். குழந்தையாயிருக்கும்
பொழுதே ஆங்கிலம் பயிற்றுவித்தார்கள்.

இவர்கள் குழந்தையாயிருந்தபொழுது தமது சகோதரர்களுட
னும், சகோதரிகளுடனும் சேர்ந்து தோட்டம், தோப்பு முதலியவைக
ளுக்குச் சென்று அங்குள்ள அதிசயங்களைக்கண்டு ஆனந்திப்பார்கள்.
புஷ்பங்களைத் தாங்களே பறித்து எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி

வருவார்கள். வீட்டு வேலைசெய்வதில் ஒவ்வொருவரும் பழக்கப்பட்டு வந்தார்கள். தாங்கள் தாங்களே தங்களுக்குவேண்டிய உடுப்புகளைத் தைத்துக்கொள்ள பழக்கப்பட்டார்கள். ஒவ்வொரு வேலையையும் இதராளுடைய சகாயமின்றி செவ்வனே செய்வார்கள். இப்படி சிறு குழந்தைகள் செய்து வந்ததானது தாய் தந்தையர்களுக்கு அதிக மகிழ்ச்சியை உண்டாக்கியது இப்படிபல்லவோ இந்தியர்களாகிய நாம் நமது குழந்தைகளை பாலியத்தில் கெட்டவர்களுடன் சேரவிடாமல் நற்புத்தி அவர்கட்குப் புகட்டி தாங்கள் தாங்களே இதராளுடைய சகாயமின்றி செய்யக்கூடிய வேலைகளைச்செய்யப் பழக்கவேண்டுவது அவசியமன்றோ? மேலும் அலக்ஸாண்டரா மகாராணியாரவர்கள் பொய்பேசவே மாட்டார்கள். மிகுந்த சாமார்த்தியமுள்ளவர்கள். இவர்கள் இளம்பிராயமுதல் நற்குணமுள்ளவர்களாயும், சமயோசிதமாய் பதிலுரைப்ப வர்களாயுமிருந்திருக்கிறார்கள். ஒரு சமயத்தில் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்கள் "அன்புள்ள ஆலிக்ஸ் மிகுந்த சாமார்த்திய முள்ளவள், உண்மையானவள்" என எழுதியிருக்கிறார்கள் இவர்களுடைய பெற்றோர்கள் அதிக செல்வமாக வளர்க்க வளர்ந்து கல்வியில் அதிக தேர்ச்சியடைந்து தமது மங்கைப் பருவத்தைபடைந்தார்கள்.

---

## எ-வது எட்வர்ட் மகாராஜாவின் ஜனனம்.

நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்களுக்கு 1841-ம்ஹு நவம்பர்மீ 9உ இரண்டாவது குழந்தை பிறந்தது. நமது மகாராணியாருக்கு முதற் பிறந்த குழந்தை பெண்குழந்தை; இரண்டாவது ஜனித்தது ஆண்குழந்தை யாகையால் மகாராணியாரவர்கள் மிகமகிழ்ந்ததுடன் ஜனங்களும் மிகச்சந்தோஷப் பட்டார்கள்; இக்குழந்தைக்கு ஆல்பர்ட் எட்வர்டு எனப்பெயரிட்டார்கள். பின்பு 1842ஹு ஜனவரி மாதம் 25உ விண்ட்ஸர் நகரத்திலுள்ள ஸேயிண்ட்ஜார்ஜு கோயிலில் இவர் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டார். அப்பொழுது அநேக பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தார்கள். சடங்கு வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. விருந்து சாப்பாட்டுக்குச்சுமார் 30-லக்ஷம் ரூபா செலவிடப்பட்டது.

குழந்தைகளை நமது விக்டோரியா மகாராணியார் தாமே எடுத்து வளர்க்கப் போதுமான சாவகாசமில்லாததனால் தாதிகளை நியமிக்கவேண்டியிருந்தது. ஆயினும் தாமே தமது குழந்தைகளுக்கு பால் ஊட்டி வந்தார்கள். நமது தேசத்தில் திரவிய முள்ளவர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பால் ஊட்டாமல் வேலைக்காரியை வைத்து பால் ஊட்டும்படி செய்து வருகிறார்கள். தங்களது குழந்தைகளுக்கு ஸ்நானம் முதலியவைகளை

இதார்களைக்கொண்டு செய்துவைக்கிறார்கள். நமது விக்டோரியா மகாராணியாரவர்களோ தாமே தமது குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்து வைத்து வந்தாராம். இதுவன்றோ விசேஷமானது! இவ்விதமன்றோ நமது தேசத்திய மாதர்கள் நடக்க முயலவேண்டும்!

குழந்தைகளை வளர்ப்பதில் மிக அக்கரை யெடுத்துக்கொண்டு அவர்களுக்கு நற்புத்தி புகட்டிவந்தார்கள். கெட்டவர்களுடன் சேர விடவேயில்லை. எப்பொழுதும் அவர்களை உபாத்தியாயர் வசம் ஒப்புவித்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து வரும்படி கட்டளையிட்டதும் தவிர அவர்களைத் தமது ஓய்வுகாலத்தில் பரீக்ஷித்தும் வந்தார்கள். மகாராணியார் தாமே தமது குழந்தைகளுக்கு தெய்வபக்தியுண்டாகும்படி பல நூல்களைக்கொண்டு போதித்துவந்தார்கள். ஒரு சமயம் ஒரு கனவான் காலஞ்சென்ற மகாராணியாரைப் பார்க்க வந்தபொழுது குழந்தைகளைப்பரீக்ஷை செய்தார். அப்பொழுது அவர் கேட்ட கேள்விகளுக்குச்சரியாக தவறாமல் பதில் உரைத்தார்கள். அவர் மிகச்சந்தோஷப்பட்டு "உங்களுக்கு இவ் விஷயங்களை இவ்வளவு நன்றாகப்போதித்த உபாத்தியாயர் மிகவும் கெட்டிக்காரர்" என்று சொன்னார். குழந்தைகள் புன்சிரிப்புடன் "எங்களுக்கு இவைகளைப்போதித்தவர் எங்கள் அருமைத் தாயார்தான்" என பதிலுரைத்தார்கள். இவ்விதமல்லவோ நமது மாதர்களுமிருக்கவேண்டும். நமது மாதர்களும் படித்திருந்தால்தான் இவ்விதம் செய்யக்கூடும். ஆனது பற்றி நமது மாதர்கள் கற்க முயலவேண்டும். அப்படி கற்பதின் பிரயோஜனம் அபரிமிதமேயாம்.

நமது மகாராணியார் தமது குழந்தைகளுக்கு சாமானிய உடைகள் உடுத்திவர பழக்கம் செய்திருந்தார்கள். தாய் தந்தையர்கள் ஏ-வது எட்வர்டின் கல்வி விருத்தியைப்பற்றி மிகக் கவலையுடன் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். இவரும் மிகக்கெட்டிக்காரரென பெயர் பெற்றார். இவருக்கு அடிக்கடி பிறருடைய முகஸ்துதிக்கும், இச்சக வார்த்தைகளுக்கும் இடம் கொடாமல் நடந்துகொள்ளவேண்டுமென பலதடவை புத்தி புகட்டியதும் தவிர கடிதம் எழுதும்பொழுதும் இவ்விதமே எழுதியும் வந்தார்கள். இப்படி இவரது பெற்றோர்கள் செய்து வந்தமையால் அவர் அவர்கள் வார்த்தையை தலை மேல் வைத்துக்கொண்டு சரியாகவே நடந்து வந்தார். இவருக்கு முதலில் எச். எம். பேர்ச் எனும் பாதிரியாரும் பின்னிட்டு மிஸ்டர் F. W. கிப்ஸ் என்பவரும் போதகாசிரியராயிருந்தனர். இவர்கள் சொற்படி எட்வர்ட்டு கேட்டு நன்றாகப்படித்து வந்தார். இவர் அப்பொழுதே தேச சஞ்சாரம் செய்யத் தலைப்பட்டார். இங்கிலண்டு, ஸ்காட்லண்டு, ஐயர் லண்டு, ஜர்மனி முதலிய தேசங்களுக்குச்சென்று அங்குள்ள விசேஷங்களை அறிந்துகொண்டார். கிரிமியாயுத்தம் நடந்த

பிறகு தமது பெற்றோர்களுடன் பாரிஸ் நகருக்குச் சென்றிருந்தார். இப்படிச் செய்வதினால் அறிவுண்டாகுமென்பது அவரது தந்தையாரின் முக்கிய எண்ணமாம். பின்பு நமது மகாராஜா அவர்கள் எடின்பரோவில் டாக்டர் லயன் பிளேபர் என்பவரது மாணாக்கராயிருந்து படித்துவந்தார். ஆக்ஸ்போர்டில் டாக்டர் ஸ்மிட்ஸ் என்பவரிடத்திலும் பின்பு கேம்பிரிட்ஜ் ட்ரினிடி கலாசாலையிலும் சேர்ந்து படித்துவந்தார்.

பின்பு 1860-ஆம் வருஷத்தில் கனடாவுக்கும், ஐக்கியமாகாணங்களுக்கும் போயிருந்தார். அக்காலத்தில் அவருடன் டியூக் ஆப்காஸிலில் சென்றிருந்தார்கள். அமெரிக்கா தேசத்து ஜனங்கள் நமது மகாராஜா அவர்களுக்கு நல்வரவு கூறி வெகுமரியாதை செய்தார்கள். இவர் பின்பு இங்கிலாண்டுக்குத் திரும்பிச்சென்று தமது தந்தையார் இறப்பதற்குமுன் ஐயர்லாண்டில் முதலில் போர்ச்சேவகத்தொழிலில் சேர்ந்து அதன் சங்கதிகளைத் தெரிந்துகொண்டார்.

---

## விவாகம்.

1861வது தமது தோழர்களிலொருவருடைய கையில் அலெக்ஸாண்டரா மகாராணியாரின் உருவபடத்தைக்கண்டு மகிழ்ந்தார். இவர்களுடைய ரூபலாவண்ணியத்தைக்கண்டு மயங்கினார். இவர்களை நேரே பார்க்கவேண்டுமென்ற எண்ணம் மனதிலுதித்தது. இதே வருஷத்தில் ஜர்மனி தேசத்துக்குச் சென்றார். அங்கு பூர்வகாலத்து ஸ்பியர் என்னும் பட்டணத்தில் ஒரு கோவிலில் ரூபவதியாகிய அலெக்ஸாண்டராமகாராணியாரை முதல் முதல் கண்டு மோகங்கொண்டார். கண்கள் கண்களையழைத்தன; ஹிருதயம் ஹிருதயத்தை ஆவலுடன் இச்சித்தது. நமது மகாராஜா அவர்கள் மகா ராணியாருடன் "பரஸ்பரமாய் அந்தரங்க விசுவாச மமைந்தது" என்றார்கள். உடனே மகாராணியாரும் தமது சம்மதத்தைப்புன்சிரிப்புடன் தெரிவித்தார்கள். இவ்விதம் இவர்களுக்கு மனப்பொருத்தம் நேர்ந்தது ஆச்சரியகரமானதேயாம். சாதாரணமாய் ஐரோப்பியருக்குள் இவ்விதம் நடந்துவருகிறது; ஆனால்இராஜவம்சத்தில் வழக்கமில்லை. ஆயினும் நமது அலக்ஸாண்டராவின் மனப்பொருத்தப் விதிக்கு விரோதமாயினும் யாவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

நமது விக்டோரியா மகாராணியாரும் 1863-வது வருஷம் பிப்பரவரி மாதத்தில் பார்லிமெண்டு கூடியபோது தமது குமாரன் விவாகத்தைப் பற்றி தாம் சம்மதித்ததாக பயிரங்கமாகச் சொன்னார்கள்; பார்லிமெண்டிலுள்ள அவுஸ் ஆப் காமனைச் சேர்ந்தவர்கள் நமது மகாராஜா அவர்களுக்கு 40,000 பவுனும், மகாராணியாரவர்களுக்கு 10,000 பவுனும் கொடு

க்க சம்மதித்தார்கள். இதைத்தவிர நமது மகாராஜாவுக்கு கார்ன்வாலி லிருந்துவரும் வருஷவரும்படி சுமார் 60,000 பவுன்.

நிற்க, அலக்ஸாண்டரா மகாராணியாரவர்கள் 1863-ஆம் வருஷம் பிப்ரவரிமாதம் 26உ கோபன் ஏகன் நகரைவிட்டு கீல்ஹனேவர் கோலோன் முதலிய விடங்களுக்குவந்து கடைசியாக மார்ச்சுமீ 2உ யன்று பிரஸல் பட்டணத்திற்கு வந்தார்கள். வழியில் ஊர்களிலுள்ள பிரபுக்களும், சீமாட்டிகளும் நமது மகாராணியாரவர்களுக்குத் தகுந்த மரியாதை செய்தார்கள். கிரேவ்ஸெண்ட் என்னும் துறைமுகத்தில் நமது மகாராஜா அவர்கள் மகாராணியாரை யெதிர்கொண்டு அழைக்கவந்தார். உடனே மகாராணியார் அவரைச் சந்திக்கப்போகையில், மிக ஆவலோடு அவர்களது கையைக்குலுக்கி முத்தமுமிட்டார் நமது மகாராஜா. நமது மகாராணியாரைப் பார்ப்பதற்கு திரள்திரளாய் ஜனங்கள் அங்கு கூடினார்கள். எல்லாரும் சந்தோஷமாயிருந்தார்கள். துறை முகத்து வாராவதியின் மீது சிவப்பு, வெளுப்பு நிறங்கள்அமைந்த வஸ்திரங்களை மாதர்கள்தரித்துக் கொண்டு பலவர்ணங்களுள்ள புஷ்பங்களைப் பரப்பியிருந்தார்கள். அப்பொழுது அலக்ஸாண்டரா அவர்கள் பரப்பியுள்ள புஷ்பங்களின்மேல் காலை வைத்து தமது அன்புள்ள நாயகனுடைய கையைப்பிடித்துக் கொண்டு நடந்து வருகையில் அந்தஸ்திரீகள் புஷ்பங்களை இவர்களின் மீது சொரிந்தார்கள். சந்தோஷத்துடன் கரகோஷம் செய்தார்கள். அலக்ஸாண்டராவின் முகம் புதிதாயுண்டான சந்தோஷத்தால் வெண்ணிறம் பாய்ந்திருந்தது.

இவர்கள் மெதுவாக நடந்து ரயில் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். பின்பு இவர்கள் அகன்றதெருக்களும், அடுக்கடுக்கான உயர்ந்த மெத்தை வீடுகளும், கூட கோபுரங்களும், மாடமாளிகைகளும், சிறந்த தேவாலயங்களும், எண்ணிறந்த ஷாப்புகளும், பூந்தோட்டங்களுமுள்ள லண்டன் மாநகரம் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது இவர்கள் எப்பொழுது வருவார்களென்றுகாத்துக்கொண்டிருந்தஜனங்கள் சந்தோஷத்துடன்பிரின்ஸ் ஆப் வேல்ஸும் அலக்சாண்டராவும் வாழ்கவென கரகோஷம் செய்ததுடன் புஷ்பமாரி புரிந்தார்கள். அப்பொழுது அலக்ஸாண்டராவுக்கு வயது 18. (இப்பொழுது 71 ஆகிறது.) உயர்ந்த உருக்கொண்டு மெலிந்த மேனி வாய்ந்திருந்தாள், மிகுந்த அழகுள்ளவள்; அவளது கண்கள் ஊதாநிறங்கொண்டுபிரகாசித்தன; அவளது நேர்த்தியான அழகைக்கண்டு அனைவரும் சந்தோஷப்பட்டார்கள். இப்படியிருக்க 1863-ஹு மார்ச்சுமீ 10உ விண்ட்சரிலுள்ளசெயண்ட்ஜார்ஜுகெதீடரலில் அலக்ஸாண்டராவுக்கும்நமதுமகாராஜாவாகிய எ-வதுஎட்வர்ட்டுக்கும்வெகு விமரிசையாக விவாகம்நடந்தது அப்பொழுது பிரதம குரு அவர்களும், குருமார்களும், பிரபுக்களும், சீமாட்டிகளும், பொதுஜனங்களும் திரளாய் கூடியிருந்தார்கள். விவாக

மானவுடன் புஷ்பங்களைச்சொரிந்தார்கள்; சந்தோஷத்தால் கரகோஷம் செய்தார்கள். வாத்தியகோஷமானது வெகு விமரிசையாக நேர்ந்ததுடன் எல்லாருடைய மனதையும் ஆனந்திக்கச்செய்தது. நமது மகாராணியாரவர்கள் மிகச் சந்தோஷப்பட்டார்கள். இவ்விவாகத்தைப் பற்றி (Bishop of Oxford) பிஷப் ஆப் ஆக்ஸ் போர்டு (குருமார்) "நான் இதுகாறுங் கண்டுள்ள விவாகங்களெல்லாவற்றிலும் இதுவே சிறந்தது; இதுவே என் மனதைக் கவர்ந்தது. பிரின்ஸஸ் ஆப் வேல்ஸ் சாந்தமும், லஜ்ஜையும், அடக்கமும் பொருந்தியிருந்தாள்" எனக்கூறினர். அன்று இரவில் ட்ராயிங்ரூமில் அவர்களைப் பார்க்கவந்தவர்கள் திரும்பிப் போக வழியில்லாமையாலும் அவ்விடத்தில் ஒழுங்காசார மங்களகர கூட்டத்தின் சம்பாஷணையாலும் தடைபட்டு மறுநாள் காலை 7-மணிக்குத்தான் தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தனராம்.

---

## இல்லற தருமம்.

இப்பொழுது இராணியவர்களுக்கு வயது 71-ஆகிறது. தம் பர்த்தாவைவிட இவர் நான்கு வருடம் வயதில் குறைந்தவர்கள். இவர்களுடைய ரூபலாவணியத்தைக் குறித்தும், தெய்வ பக்தியைக்குறித்தும், ஸ்டான்லே என்கிற ஒரு பெரிய மடாதிபதி பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

"இவர்கள் யுக்தியும், சௌந்தரியமும் உள்ளவர்கள். உண்மை யுருக்கொண்டவர்கள், தெய்வ பக்தியுள்ளவர்கள் ஈஸ்டர் பண்டிகையின் ஒருநாள் மாலையில் நான் தெய்வ ஆராதனை செய்து, வேத புத்தகத்தை என் கையில் எடுத்துக்கொண்டு, இந்த அழகிற் சிறந்த ஸ்திரீயை ஆசிர்வாதம் செய்தேன். சௌந்தரியத்தில் நமது புராணங்களில் வர்ணிக்கப்படுகிற திவ்விய சுந்தர விக்கிரங்களைப் போலிருக்கிறார்களென்று சொல்லலாம்."

இவர்கள் உன்னத அந்தஸ்தை அடைய விரும்பாமலிருந்தபோதிலும், எவர்களாவது தம்மை பட்டமகிஷியென்று சொல்லாமல் இளவரசருடைய பத்தினியென்று மாத்திரம் சொன்னால் அவர்கள் மீது சினங்கொள்வார்கள்.

அரசர்கள் குடும்பத்தில் அர்த்தாங்கி, பிராணநாயகன், (consort) என்று அழைக்கும்படியான வழக்கம் எப்படி வந்ததென்றால், சொர்க்கத்தில் தற்காலம் அரசுபுரிந்துவரும் நமது விக்டோரியா மகாராணியாருக்கு ஆல்பர்ட் என்பவர் பிராணநாயகரானதே தவிர, இராஜ்ஜியத்திற்கு அதிபதியாகாததினிமித்தம் அவரை அரசர், அல்லது சக்கிரவர்த்தியென்று அழைக்கமுடியாமல் இராணியாரின் பிராணநாயகரென்று மாத்திரமே

அழைத்துவந்ததினால், அதே வழக்கப்படி இந்த அம்மாளையும் இளவரசருடைய பாரியையென்றே எவரும் அழைத்துவந்தார்கள்.

கான்சர்ட் என்று சொல்லும்படியான ஆங்கில வார்த்தையானது ஆண்பாலார், பெண்பாலார் இருவருக்கும் உரிய தாகையால், அந்த வார்த்தையை புருஷரான ஆல்பர்ட் என்பவருக்கும், ஸ்திரீயாகிய அலெக்ஸாண்டரா மாதுக்கும் உபயோகித்து வந்தார்கள். பூர்வத்தில் இளவரசாயிருந்தவரும், இப்போது ராஜ்ஜி 'த்திற்கு அதிபதியாயுமிருப்பவராகிய 7-வது எட்வர்ட் என்பவருக்கு இந்த அரசாட்சிகிடைப்பதற்கு முன்னமே இந்த மாது தெய்வசாட்சியாய் பாணிக்கிரஹணஞ் செய்துகொண்ட அர்த்தாங்கியாகையால் அவருக்குக் கிடைத்த இளவரசுபிரபுத்துவத்தையும், இராஜ்யபரிபாலன அதிகாரத்தையும், இந்த அம்மாளும் அநுபவித்து வந்தார்களல்லவா? ஆகையால் அந்தந்த காலத்தில் அந்தந்த அதிகாரங்களினால் இந்த அம்மாளும் கௌரவிக்கப் படாமலிருந்தால் இந்த அம்மாளுக்கு அது விஷயத்தில் வருத்தம் உண்டாகாதா? அதனால் நம்முடைய அலெக்ஸாண்டராவை பாவியத்தில் இளவரசியென்றும், இப்போது இராணியென்றும் அழைப்பதே முறைமை. இது இந்த அம்மாளுக்கு ஒரு கௌரவமல்லவா? இந்த மாதின் தந்தையாராகிய டென்மார்க் அரசர் தனவந்தராக விருந்தாலும், தக்கபடி நடத்தின தகப்பனாரின் ஆக்கினைகளுக்கு இந்த அம்மாள் கீழ்ப்படிந்து வந்ததுந் தவிர, பெண்பாலார்க்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்கிற நான்கு நற்குணங்களும் பொருந்தியுள்ளவர்களாயிருக்கிறார்களென்று ஜனங்கள் மிகவும் புகழ்ந்து வருகிறார்கள்.

இந்த மாது கலியாணஞ் செய்து கொண்டு தமது கணவருடைய அரண்மனையை யடைந்த பிறகு, தாம் வெகு ஐஸ்வரியத்தால் நிறைந்தவர்களா யிருந்தபோதிலும், பெருமை யென்கிற வார்த்தையை சிறிதேனுங் கொள்ளாமல் சாதாரண ஸ்திரீயைப்போல் விளங்கி வருகிறார்கள். அதிக விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து கொள்வதிலும், மனதிற்கு ஆநந்தத்தை உண்டாக்கும்பொருள்களை வாங்குவதிலும், திரவியத்தை அதிகமாகச் செலவு செய்யாமல் போதுமான அளவு செலவு செய்வார்கள். தாம் அதிக ஐஸ்வரியமுள்ள ஒரு அரசருடைய செல்வக் குமாரத்தியா யிருந்தாலும், "மாமியார் வீட்டில் மருமகள் எவ்விதம் அடங்கி நடக்க வேண்டுமோ அவ்விதம் அடங்கி நடந்து வந்தார்கள். இதல்லவா சன்மார்க்க நடக்கையுள்ள மருமகளின் இலட்சணம்! இவ்விதமாக சமுசாரஞ் செய்ய ஆரம்பித்த சில தினங்களுக்குள் அம்மாது ஓர் ஆண் குழந்தையைப் பெறும் பாக்கியவதியானார்கள். அம்மாது அதாவது 1864வருஷ ஜனவரிமீ 8உ சாயங்காலம் உல்லாசமாய் பொழுது போக்குவதற்காக,

தமதரண்மனையின் சமீபத்திலிருந்த ஓர் நதிக்கரைக்குப் போயிருந்த காலத்தில், ஆண் குழந்தையைப் பிரசவித்தார்கள். அக்காலத்தில் அந்தம்மாளுடன் இரண்டொரு வேலைக்காரிகள் மாத்திரம் இருந்தார்களே யன்றி வேறு ஒருவரும் அவ்விடத்தில் இல்லை. இச்சங்கதி அரண்மனைக்குத் தெரிந்தவுடனே மகாராணியாரவர்களும், ஆல்பர்ட்டும், மற்றுமுள்ள பந்துக்கள் யாவரும் ஆச்சரியத்துடன் திகிலும் அடைந்திருந்தார்கள். அங்கு ஜனித்த இளங்குழந்தைக்குப் போர்ப்பதற்கு, அந்தம்மாள் அக்காலத்தில் போர்த்துக் கொண்டிருந்தபிளானல் வஸ்திரம் தவிர வேறு வஸ்திரம் ஒன்றும் இல்லாமையால், அதையே அக்குழந்தைக்கு போர்வையாக போர்த்தார்கள்.

கடவுளின் செய்கையைப் பார்த்தீர்களா? அக்குழந்தைக்கு என்ன குறைவு? அதன் தகப்பனார் வேல்ஸ் தேசத்தின் இளவரசர். பாட்டியாரோ இங்கிலாந்து, இந்தியாமுதலிய தேசத்தை ஏக சக்கிரவர்த்தினியாய் ஆண்டுவந்த மகாராணியவர்களன்றோ? இவ்வித பெருமை வாய்ந்த அக்குழந்தைக்கு ஒரு நதி தீரம் ஜென்ம ஸ்தானமாக வாய்த்தது விதியின் பயனல்லவா? தமது இரண்டொரு வேலைக்காரிகள் தவிர வேறு ஒருவரும் இல்லாத அந்நதிதீரத்தில் அந்தம்மாள் அக்குழந்தையைப் பிரசவித்த போதிலும், கடவுளுடைய கிருபையால் தாயாரும், குழந்தையும் சுகமாகவே யிருந்தார்கள். உடனே ஆல்பர்ட் சிலவேலைக்காரர்களையும், பெண் வைத்தியர்களையும், மருத்துவப்பெண்களையும் அனுப்பி அதிக பத்திரமாக அந்தம்மாளை அழைத்து வரும்படி உத்தரவு செய்தார்கள். அவர்கள் வேண்டிய மருந்துகளுடன் அவ்விடம் சென்று தாயும், குழந்தையும் சௌக்கியமாயிருப்பதைக்கண்டு மகிழ்ந்து, வேண்டிய சீதோபசாரங்களையெல்லாஞ் செய்து, வண்டியில் அவர்களை வெகு சாக்கிரதையாக ஏற்றி அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள்.

ஜனனசௌசம் முடிந்தபிறகு குழந்தையைத் தொட்டிலில் விட்டு தாலாட்டி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்திவந்தார்கள். இக்குழந்தைக்கு பிரின்ஸ் ஆல்பர்ட் விக்டர் என பெயரிடப்பட்டது. இந்தம்மாள் ஆண் குழந்தையைபபெற்று சந்தோஷமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில் இவர்களுக்கு பெரிய விசனமொன்றுண்டாயிற்று. அஃதென்ன வென்னில், தமது தகப்பனாருக்கும், ஜெர்மனி தேசத்தரசனுக்கும் அதிக நாளாக பொங்கிக்கொண்டிருந்த கோபமானது நாளுக்குநாள் வளர்ந்து விவாதமுண்டாகி யுத்தம் செய்யும்படி நேரிட்டது. இந்த சங்கதியை இந்த மாது செவியேற்றதும், தாம் வயதில் சிறியவர்களாயும், அநுபவம் இல்லாதவர்களாயு மிருந்ததனால் அதிக மனவருத்த முடையவர்களாய் இந்த ஆபத்து நீங்கும்பொருட்டு கடவுளைப்பிரார்த்தித்து, தாமும் பிரயத்தனம் செய்தார்கள். பத்திராதிபர்

தாக பதில் சொல்லி, அமிர்தேசன், ஹம்ஸப்பிரியன் இவர்களிடத்தில் விடைபெற்றுக் கொண்டு குதிரை மீதேரிப் புறப்பட்டான்.

வழியில் செலவுக்குப் பணம் வேண்டியிருக்குமோ என்னவோ வென்று அமிர்தேசன் உத்தரவுப்படி கொஞ்சம் காசுகளைத் தலைப்பில் முடிந்து கொண்டிருந்தான். குளிர் மிகுந்தபின் பனிக்காலமாகிய தைமாத க்காலையில் தேகத்தை நன்றாய்ப் போர்த்துக்கொண்டு உல்லாசமாய்ச் சவாரிசெய்தான் எதுகுல திலகன்.

சுமார் 5,6 நாழிகை வழிநடந்து அமிர்தேசன் சொன்ன குறிப்புகளால் வழிதப்பாமல் லக்ஷ்மணபுரி போய்ச் சேர்ந்தான். அவ்விடத்தில் அச்சுவல பாரிஜாதன் வீட்டை விசாரித்து, அவ்வீட்டண்டை இறங்கிக் குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு கதவை இடித்தான். சுமார் பதினான்கு வயதுள்ள சிறுபெண் கதவைத்திறந்தாள்.

"அம்மா மணிகாரர் அச்சுவல பாரிஜாதர் வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டான்.

"இல்லை ஐயா! அவர் இவ்வீட்டில் இப்பொழுது குடியில்லை. அவர் வனத்துக்கு ஏதோ காரியமாய்ப் போய் இருக்கிறார்" என்று பதிலுறைத்தாள்.

"சரி; அவர் திரும்பிவரும் சங்கதி ஏதாவது தெரியுமா?"

சாயங்காலம் தான் அவர் திரும்பிவரும் சமயம்: வேலைமுடிந்தால் சீக்கிரமாயும் வரலாம். வந்தால் நேரே இங்கேயேதான் வருவார்."

"ஆனால் அவர் வரும் வரையில் அல்லவா காத்துக்கொண்டிருக்க வேண்டியது, காரியம் முடியவேண்டுமானால்!" என்று சற்றுபலமாய்த் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

"நீர் ஒருகோடி நிற்பதாய் இருந்தால் என் தகப்பனாருடன் வேண்டுமானால் உமது வரவைப்பற்றிச் சொல்லிவருகிறேன்." என்று ஓட்டமாய் உள்ளே போய்விட்டு மறு நிமிஷத்தில் மின்னல் கொடிபோல் மறுபடி, திரும்பிவந்து "ஐயா உம்மை எனது தகப்பனார் பார்க்கவேண்டுமென்று அழைக்கின்றார். பாரிஜாதரைப் பார்க்க வந்து இருப்பினும் சற்று உள்ளே நுழைந்து தன்னையும் பார்த்துவிட்டுப் போகலாம்" என்று கேட்டுக்கொள்ளுகிறார் என்றாள்.

எதுகுலன் மரியாதையாய் அப்பெண்மணியைப் பின்தொடர்ந்து உள்ளே நுழைந்தான். எதிரே கூடத்தில் பெரிய உத்தியோகஸ்தன் போன்று ஒரு மனிதன் நாற்காலிமேல் உட்கார்ந்து இருந்தான். அவர்கள்

இருவரும் அம்மனிதனுடைய பின்புறத்தில் நின்றமையால் அவன் இவர்களைப் பார்க்கவில்லை. எதுகுலனுக்கு மட்டும் அவன் விஜ்ஜலனண்டை உழைக்கும் ஒரு உத்தியோகஸ்தனுப்த்தான் இருக்கவேண்டு மென்பது தெளிவாய் விளங்கிற்று. அவனது நீண்டகத்தியும் உருமாலையும் நாற்காலியின்மீது வைத்து இருந்தன. அவர் முன் இருந்த ஊஞ்சல் பலகையின் மீது ஓலைகள் குவியலாய்க் குவிந்து இருந்தன.

"இதோ இவர்தான் அப்பா" என்றாள் அப்பெண்மணி தன்தந்தையிடத்தில். அந்த மனிதன்—அதாவது பிரபு, ஏனெனில் அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே அவன் ஒரு பிரபுவென்று நன்கு விளங்கிற்று—அப்பிரபு, அப்பெண் சொன்னதை கவனியாமல் ஏதோ ஒரு கடிதத்தை வாசித்துக்கொண்டே யிருந்துவிட்டார். எதுகுலன் "இது என்னடா பாடு; பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்தது; மணிகார பாரிஜாதனைப் பார்க்கவந்தால், இப்பெண்மணியின் பேச்சைக்கேட்டு, இராஜத்துரோகியான ஒரு உத்தியோகஸ்தனிடம் வந்து சிக்கிக்கொண்டோமே! இவனோ வெகு கர்வம் கொண்டவன்போல் தோன்றுகின்றது. அப்பெண் சொல்லியும் என்னை கவனிக்க வில்லையே" என்று எண்ணிக்கொண்டு தன்னை அவமரியாதை செய்ததற்காகக் கோபம் ஒரு புறம் மூள, கண் முகமெல்லாம் சிவந்து பசியோடு வருந்தும் சிங்கம்போல் விளங்கினான். நல்ல வேளையாய் அப்பிரபு இன்னும் கொஞ்சநேரம் ஒரு கடிதத்தைக் குறிப்பாய்ப் படித்துக்கொண்டே இருந்து விட்டார். எதுகுலன் பக்கம் திரும்பவேயில்லை. எதுகுலனும் அதற்குள் தன்னிலைமையை அறிவானுயினான். தான் உக்ர நரசிம்மன் வம்சத்தவன் என்று சொல்லிக் கொள்ளாமல் இப்பொழுது வனபால அமிர்தேசன் போனாய் இருப்பது தனக்கே ஞாபகம் வந்தது. "வனபாலர்களுக்குப் பிரபுக்கள் என்ன மரியாதை செய்வார்களோ அவ்வளவுதானே நான் இப்பொழுது எதிர் பார்க்கலாம்" என்று தன் மனதைத் தேற்றிக் கொண்டான். ஆனால் கோபக் குறிகள் முற்றும் அவன் முகத்திலிருந்து நீங்கவில்லை. வாயை மூடிக்கொண்டு சும்மா நின்றான்.

கடைசியாய் அவ்வோலையைப் படித்து முடித்ததும் அப்பிரபு எதுகுலனைத் திரும்பிப் பார்த்து என்ன, அப்பனே வேலை உனக்கு இவ்விடத்தில்?' என்று கேட்டார்.

"எங்கள் சொந்தக் காரியமாய் மணிகாரர் பாரிஜாதனண்டை வந்தேன். தங்களிடம் ஒருவேலையுமில்லை. அவரைப் பார்த்துப் போகும் போது அவரிடமிருந்து இரண்டு நாய்க் குட்டிகள் வாங்கிக் கொண்டு போய் என் பாட்டனுருக்குக் கொடுக்கவேண்டும். இதற்காகத் இங்கு வந்தேன்" என்றான்.

'உன் பாட்டனார் பெயர் என்ன?"

"வனபால அமிர்தேசர்."

"அமிர்தேசனா?" என்று சொல்லிக்கொண்டே ஒரு பெரிய கடிதத்தைக் கையில் எடுத்துக் குறிப்பாய்த் தேடிப் பார்த்தார். "அமிர்தேசன் துங்கபத்திர வாஸி, வனபாலன், கருமலை நகரம் ஓகோ! நரசிம்ம மல்ல வீரனிடத்தில் பல நாள் இருந்துவிட்டு வனபாலன் ஆனவன்—அப்படியானால் ஏன் உன் பாட்டனார் என்னை இன்னும் வந்து பார்க்கவில்லை?" என்று கேட்டார் பிரபு.

"உம்மிடம் என்னத்துக்கு ஐயா என் பாட்டனார் வரவேண்டும்?"

"பிள்ளாய்! இவ்வனாந்தரங்களும், இத்தேசமும், இராஜாங்கமும், தைலப்ப சக்ரவர்த்தியுடையதல்ல இனிமேல்; விஜ்ஜல முக்கிய புருஷர் முன்னின்று நடத்தும் குடியரசைச் சேர்ந்து விட்டது. இவைகளெல்லாம் உனக்குத் தெரியுமா சங்கதி? இப்புறத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு உத்தியோகஸ்தனும், ஒன்று குடியரசுக்கு உட்பட்டு உழைக்க வேண்டும்; இல்லையேல் வேலையை விட்டு ஓடிப் போகவேண்டும். இந்த விவரத்தை நான் ஒவ்வொரு உத்தியோகஸ்தனுக்கும் சங்கதி சொல்லியனுப்பியிருக்க உன் பாட்டன் மட்டும், ஏன் மகனே, இன்னும் இங்கு வந்து தன் இஷ்டத்தை எனக்குத் தெரியப்படுத்த வில்லை?"

"என் பாட்டனுக்கு இந்த நிமிஷம் வரையில் இவ்விஷயத்தை ஒருவரும் வந்து சொல்லவில்லை, ஐயா! அவர் அரசனிடத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து வேலை செய்து வந்தவர். 2, 3, வருஷங்களாக அவருக்கு வர வேண்டிய சம்பளங்கள் வரவில்லை. பரம்பரையாய் அவர் முன்னோர்கள் குடியிருந்த குடிசையில் இருந்து கொண்டு காலம் கழித்து வருகின்றார்"

"அது இருக்கட்டும் பிள்ளாய், நீ உன் பாட்டனிடம் குடியிருக்கிறாயா? அல்லது எங்கேயாவது தனியாய் இருக்கிறாயா?"

"ஒரு வருஷகாலமாய் அவருடன் இருக்கின்றேன்."

"நல்லது, இரண்டு வருஷகாலமாய் அவருக்கு சம்பளம் முதலியன வரவில்லை என்றாயே, எப்படியப்பா வயிறுவளர்க்கிறார் அவர் வழியென்ன சொல்லப்பா?"

"மற்ற வனபாலர்க்கு என்ன வழியோ அதே வழிதான், பின்னை என்ன இருக்கின்றது? என்றான் தைரியமாக.

"வெகு சாமர்த்தியமாய்ப் பேசுகிறாய் மகனே!! உன் பாட்டனைப் பற்றி எனக்கும் கொஞ்சமாவது தெரியும் தம்பி! அவர் உழைத்தது

நரசிம்ம மல்ல வீரனிடத்திலல்லவா? இன்னுமொரு கேள்வி இப்பொழுது. நீ இரண்டு நாய்க் குட்டிகள் வேண்டுமென்றாயே, அவை என்னத்திற்கு?"

"தெரியாதா? வேட்டையாடத்தான்!!"

"ஆகவே நீங்கள் இப்பொழுது கூட வேட்டையாடுகிறீர்கள் அல்லவா?" என்று கேட்டார்.

"உமக்கு பதில் சொல்ல எனக்கு இஷ்டமில்லை, முதலாவது நான் உமது கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி தண்டனைக்கு உட்படுவதற்கு இங்கு வரவில்லை. இரண்டாவது, இக்கேள்விகள் கேட்க உமக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? அதைச் சொல்லுமையா முன்னால்" என்று கேட்டான் எதுகுல திலகன்.

"சிறு பிள்ளாய் எனக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்பது தெரிய வேண்டுமானால், இதோ இருக்கின்றது பார் வ! அதிகப் பிரஸங்கி,—இவ்வார்த்தை எதுகுலன் காதில் பட்டதும், கண் சிவந்து, உதடு துடித்துக் கைகால் பதறின—இதோ பார் என் அதிகார பத்திரம். என்னை இப்பிராந்திபத்துக்குப் பிரதி நிதியாய் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நான் இந்த நாட்டுக்கு எஜமானனாகவிருந்து வரி வசூல் செய்து இவ்வனாந்தரங்களையும் மேல் பார்வை பார்த்துக் கொள்ளவேண்டியது. உனக்கோ எழுத்து வாசனையிராது, எப்படி படிக்கப் போகிறாய் இப்பத்திரத்தை? நான் சொல்வதை நம்பி சும்மாவிரு" என்றான் கொஞ்சம் கடுத்த குரலோடு. பத்திரத்தை அப்பிரபு கீழே வைத்ததும், அவர் நாற்காலியிடம் நெருங்கி வாய்திறந்து பேசாமல் ஓலையைக் கையில் எடுத்துக் கொண்டு வாசித்தான். வாசித்து முடிந்ததும் "ஆம்! நீர் சொல்வது சரிதான்!! நீர்தான் இப்பிராந்தியத்துக்கு எஜமானன் என்று வைத்துக் கொள்வோம். இருப்பினும் தேதி தனுர் மாதம் யிருப்பதே யல்லவா போட்டிருக்கின்றது! இன்றைக்கு 14, 15 நாள்தானே ஆகின்றது!! என்று சொல்லிக்கொண்டே அப்பத்திரத்தை ஊஞ்சல் பலகையின் மீது வைத்தான்.

"அதனால் என்ன? 14 நாள் ஆனால் என்ன; 15 நாள் தான் ஆனால் என்ன? அதில் ஒரு வித்தியாசமும் காணோமே! என்று சற்று ஆச்சரியத்துடன் எதுகுலனைப் பார்த்துக்கொண்டே சொன்னார் அப்பிரபு.

"என் அதில் எவ்வளவோ விசேஷம் இருக்கின்றது. என் பாட்டனார் அமிர்தேசருக்கு வாயுவினால் உடம்பெல்லாம் பிடிப்புண்டு. இந்த 2, 3 மாதமாய்ப் படுத்த படுக்கையில் இருக்கின்றார். இச்சமயத்தில் அவர் மானையாவது மிருகத்தையாவது வேட்டையாடக் கூடுமா இப்பொழுது

குடியரசு, இராஜ்யத்தையெல்லாம் கைக்கொண்டதானால், அப்படிச் செய்யும் வரையில் இவ்வனமெல்லாம் அரசனுடைய தேயல்லவா? இப்பொழுது வேண்டுமானால் உங்களுடையது என்று சொல்லிக்கொள்ளுங்கள்; யார் வேண்டாம் என்கிறார்கள். ஆகவே தனூர்மாசத்துக்கு முன் வேட்டையாடின குற்றத்திற்கு என் பாட்டனார் சக்ரவர்த்திக்குத்தான் பதில் சொல்லவேண்டுமே ஒழிய உங்களுக்கு பதில் சொல்லவேண்டிய அவசியம் என்ன விருக்கின்றது என்று கேட்டான்.

"இந்த ஏட்டில் உன் பாட்டனார் இராஜவிசுவாசி யென்று எழுதாமல் இருந்தபோதிலும், இப்பொழுது நீ பேசும் வார்த்தைகளில் இருந்து உன் பாட்டனார் எந்தக்கக்ஷியைச் சேர்ந்தவர் என்றும், உன்னை எவ்விதம் வளர்த்து வந்து இருக்கின்றார் என்றும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது."

ஐயா பாலூட்டிய வீட்டுக்குப்பகை நினைக்கலாமா? உப்பும் சோறும் உண்டுவிட்டு துரோகம் செய்வது சாத்தியமா? அமிர்தேசனும், அவன் தகப்பனும், நரசிம்மமல்லர் வீட்டிலேயே வேலை செய்து வந்தார்கள்: அவ்வீரிடத்திலேயே பலகாலம் சிப்பாய்களாய் இருந்தார்கள்; வனபரிபாலத்துவம் கிடைத்ததும் நரசிம்மகுலத்தார் தயவினாலேயே!! அப்படியிருக்க நான் அமிர்தேசனுடைய இராஜவிசுவாசத்தைச் சிலாகித்துப் பேசுவதில் என்ன தப்பு? என் பாட்டனாரும் நரசிம்மமல்லருக்கு விரோதமாய் எப்பொழுதும் பேசவேமாட்டார், என்றான் எதுகுலன் உற்சாகத்துடன்.

"பிள்ளாய் உனக்கு இடமறிந்து பேசத்தெரியாவிடினும் நன்றிமறவாமல் பேசுகிறாய். உக்ரநரசிம்மன் வீரநரசிம்மன் இவர்கள் வீராதிவீரர்கள்; அவர்களுடைய இராஜபக்தியையும் நன்றியறிவையும் நான் மெச்சியபோதிலும், அவருடைய பக்தி மூடபக்தியே ஒழியவேறில்லை. நீங்கள் எல்லாரும் குடியரசுக்கு எதிராய் இருப்பது தெரிந்தும் உங்களுக்கு என்னிடத்தில் வேலை கொடுப்பது என் அந்தஸ்துக்கும் என் யோக்கியதைக்கும் குறைவு——ஆனால் நீ உன் இளம்பிராயத்தில் எங்கு வளர்ந்தாய்" என்று கேட்டார் சற்றே யோசனை பண்ணி.

"ஐயா நான் மாளிகையில் எஜமானன் குழந்தைகளுடன் வளர்ந்தேன்."

"அங்கேயே படிக்கக் கற்றுக்கொண்டனையோ?" என்று மறுபடியும் கேட்டார்.

"அலைந்து திரிய இஷ்டமின்றி வீட்டில் இருக்கத்தோன்றிய பொழுதில் உபாத்தியாயரும் நேருவாரானால் ஏதோ கொஞ்சம் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்வது வழக்கம்." என்றான் நிதானமாக."

"மாளிகைத்தீப்பற்றியபோது எங்கிருந்தாய்?

"ஐயா அப்பொழுது நான் குடிசையில் இருந்தேன்" என்றான் பல்லைக்கடித்துக்கொண்டு, தேகமெல்லாம் கோபத்தால் பதைபதைக்க!!

"பிள்ளாய் உனக்குக்கோபம் மூளுவது தர்மமே; நாங்களும் அக்காரியத்தைக் கெட்டதென்றே தீர்மானித்து அவ்விதம் செய்தவர்களைத் தண்டித்தோம்" என்றான் பிரபு, வாடினமுகத்துடன். எதுகுலனுக்கு அதைப்பார்த்துக்கொஞ்சம் கோபம் தணிந்தது. சிறிதுநேரம் பொறுத்து "ஐயா நான் பாரிஜாதனைத் தேடிவந்த காரியம் வீணாயிற்று. இனி நாய்களை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்யப்போகிறோம்?"

"ஏன்?——"

"ஏனெனில் நீங்களோ வனமெல்லாம் உங்களுடையதென்கிறீர்கள். நாங்கள் அவ்வனங்களில் வேட்டையாடினால் உங்கள் அபிப்பிராயப்படி குற்றவாளிகளேயல்லவா?" என்று கேட்டான்.

"ஆம்! ஆம்!! சிறு பிள்ளையானாலும் நீ சிறந்த புத்திசாலி! நான் சொல்லவேண்டியதை நீயே சொல்லிவிட்டாய்" என்றார் பிரபு.

"ஐயா நீங்களோ எங்களுக்கு வேலை கொடுக்கமுடியாதென்று சொல்லிவிட்டீர்கள்! இனிமேல் நாங்கள் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாய் இராஜவிசுவாசிகளாய் இருப்பதற்குத் தடையுமுண்டோ? வேலையிலிருந்து தள்ளப்பட்டவன் தனக்குவேண்டிய சாமான்களை வனத்திலிருந்து திருடிக்கொள்ளுகிறான்: அப்பொழுது என்ன செய்வீர்கள்?" என்று கேட்டான் எதுகுலன்.

"உனக்கேதெரியுமல்லவா? உங்கள் தைலப்பன் சட்டப்படியே தான் நாங்களும் தண்டனை விதிப்பது!! திருடனைக்கண்டு பிடித்தால் தண்டிக்கிறோம்——அவ்வளவேதான்——இனி எனக்கு வேலையிருக்கின்றது. அதோ சமையல் அறைப்புறம் போய் ஏதாவது சாப்பாடு கிடைத்தால் சாப்பிட்டுவிட்டு, பாரிஜாதன் வரும்வரையில் காத்திரு: உனக்குவேண்டிய உணவுகொடுப்பார்கள்" என்றார் பிரபு.

எதுகுலனுக்குத் தன்னைப்பார்த்து "சமையல் அறைக்குப்போய் ஏதாவது வாங்கிச்சாப்பிடு" என்று அவமரியாதையாய்ச் சொன்னது மிகவும் மனதைப்புண்படுத்திற்று ஆயினும் வேறுவிதியில்லாமல் சமையல் அறைக்குப்போனான்.

# அழகேசன்.

முன்னொரு காலத்தில் அளகாபுரி என்னுமோர் பட்டணமுண்டு. அப்பட்டணத்தில் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைஞானம், தொண்ணூற்றாறு தத்துவம், பதினெண்புராணம் ஆகிய இவைகளைத் தெளிவாகக் கற்றுணர்ந்து மநுநீதி தவறாமல் தன்னுயிரைப் போல் மன்னுயிர்களையும் பாது காத்து, குடிகளிடம் ஆறிலொரு கடமை வாங்கி, தனது மந்திரிமார்களும் புடைசூழ, கொலுவிலமர்ந்து, ஐம்பத்தைந்து தேசங்கட்கும் அதிபதியாய் நின்று, ராஜ்யபரி பாலனம் செய்து வருகின்ற ஜயசீலன் என்னும் சக்கரவர்த்திக்கு லீலாவதி யென்றொரு மனைவி யுண்டு

இச்சக்கரவர்த்தியார் இருபது வருஷகால பரியந்தம், அரசுபுரிந்தும், இவர்கட்கு இதுகால பரியந்தம், ஒரு குழந்தையேனும் பிறக்கவில்லை இதைப்பற்றி சக்கரவர்த்தியாருக்குக் துக்கம் மேன்மேலாய் விளைந்து, தமது மந்திரியாகிய மதிவதனனை நோக்கி, கேளாயப்பா எனது மனதிற்குகந்த, மதிவதனரே, கடவுளானவர் எனக்கு சகல வைபவங்களையும் கொடுத்து, புத்திர பாக்கியமொன்று தாராமலிருப்பதனால், நான் பாபியோ, அல்லது முன் செய்த தீவினையின் கூற்றோ, அல்லது என்தேவியாகிய லீலாவதி, யாதேனுந் துன்பம் புரிந்திருப்பாளோ, என்னமோ, எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை.

ஆகையால் இதன் காரணத்தைக் கண்டுணர்ந்து கூறவேண்டுமென்று கூறிய சக்கரவர்த்தியின் மொழியைக் கேட்ட மதிவதனர் என்னும் மந்திரியானவர் மிகவும் வணக்கத்துடன், கேளும், ராஜாதிராஜா பரமேஸ்வரா, தயை, தாக்ஷண்யம், அறம், நெறி முதலாகிய சத்தியத்திற்கு, வித்தாயுள்ளவர் நீரேயன்றி மற்றவர் ஒருவருமில்லை. ஆதலால் எங்கும் சம்பிரமமாய் அன்னதானங்கள் செய்யும்; எல்லோரையும் வரவழைத்து ஒவ்வொருவருக்கும் வேண்டிய வஸ்திரங்களைத்தாரும், வருகிறவர்களிடத்தில் தயையுடன் பேசும், நீர் செய்யும் நற்காரியங்களை யெல்லாம் அவர்களுக்கு காண்பியும், அவர்களுடைய பிரார்த்தனை மூலமாய் உமதுள்ளத்தில் நிரம்பி யிருக்கும் விருப்பம் சம்பூர்ணமடையுமென்று உறைத்து விட்டு தன் தொழிலில்தான் பிரவேசித்திருந்தனர்.

சக்கரவர்த்தியானவர் மந்திரியின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு அவன் சொல்லியவண்ணம் செய்யும்படி கட்டளையிட்டார். மதியிற் சிறந்த மந்திரியானவர் தான் கருதியபடி தானதருமங்கள் செய்வதற்கு கூட்டமொன்று பட்டணத்தில் அமைக்க அரசனிடத்தில் விடைபெற்று, சிற்பி வேலையில் தேர்ந்தவர்களை வரவழைத்து கட்டடத்துக்கு வேண்டிய

சாமான்களை யெல்லாம் சேகரம் செய்து அன்னதான பிரதிஷ்டைக்கு பிரத்திபேகமாய் கட்டடம் ஒன்று திட்டஞ் செய்யச் சொன்னான். கட்டடம் கட்டி நிறைவேறிய பின்னர் அன்னதானம் செய்வித்தான். ஒவ்வொரு தினமும் எளியவர்களும், பாட்டைசாரிகளும், இந்த தருமத்தைப் பெற்றுக்கொள்ள வந்தார்கள்.

இவ்விதமாகச் சத்திரம் கட்டுவித்து, தானதருமங்கள் செய்துவரும் நாளில், ஒரு நாள் விபூதி, உத்திராக்ஷம், காவி, தண்டுகமண்டலம், முதலாகிய சிவபூஷணங்களணிந்த ஒரு பெரியவர் அளகாபுரிக்கு வந்து ஜயசீலனைக்கண்டு ஆசிகூறி நிற்கும்போது, சக்கரவர்த்தியார் கொலுவை விட்டிறங்கி மந்திரிமார்களுடன் வந்து பெரியவருடைய பாதத்தினடியில் வீழ்ந்து, கண்களில் ஆனந்த நீர் பெருக, கைகூப்பி நின்று, எம்பெருமானுடைய நித்யவிபூதி கண்டனுபவிக்க என்ன தவஞ்செய்தேனோ என்று பணிந்தெழுந்து, பெரியவரைப் பார்த்து, ஓ! சுவாமி, நீர் யாரோ எனக்குத் தெரியவாராது. சகல லோகநாயகனாகிய ஜெகதீசனைப்போல் காண்கின்றீர். அடியேனுக்கு சகல சம்பத்தும் கொடுத்து பாக்கிய மொன்றருள் செய்யாதிருப்பது நன்றல்லவே. அடிமையின் குற்றத்தைப் பொறுத்து, புத்திர சந்தான மளிக்கவேண்டும் நாதா என்று வேண்டினார்.

உடனே அப்பெரியவர் இரக்க முடையவராகி அரசனது குணங்களையும் நல்லொழுக்கத்தையும் கண்டு மனதில் ஆனந்தப்பரவசராய் தன்கரத்திலிருந்த மாங்கனி யொன்றை மன்னனிடத்தில் கொடுத்து உனது பட்டத்தரசியை உண்ணும்படி செய்யவேண்டுமென்று சொல்லி மறைந்துவிட்டார். அரசன் பெரியவரைக்காணாது மிகவும் வியப்புற்று, தனது கரத்திலிருந்த மாங்கனியோடு அந்தப்புரம் சென்று, தனது பட்டத்து தேவியாகிய லீலாவதி யிடத்தில் கொடுத்து, பெரியவர் மொழிந்த வசனங்களை ஓதி, கனியைப் புசிக்கச்செய்தான். அவள் சிலகாலஞ்சென்றபின் கர்ப்பிணியானாள். அரசி கற்பவதியானசேதி உடனே அரண்மனையிலும் பட்டணமெங்கும் பரவியமாத்திரத்தில் யாவரும் சந்தோஷப்பட்டார்கள். அரசிக்கு ஒன்பதாமாதம் கடந்து, பத்தாமாதம் பூர்த்தியாகி சூரியனைப் போன்ற பிரகாசமும் அழகு சௌந்தர்யமுமுள்ள ஒரு ஆண் குழந்தை ஜனித்தது.

இது சங்கதி அரசனறிந்து மிகவும் சந்தோஷப்பட்டு தன்தேயம் முழுமையும் எளியோர்களுக்கும், சைனியத்துள்ளோருக்கும், வேண்டிய பொருள்களும, நாடும் கொடுத்து, 32, தர்மமும் குறைவற நடத்தி, அட்சணமே பிள்ளையின் சாதகத்தைக் குறிப்பதற்காக ஜோதிடர்களை வரவழைத்தான். மதிநுட்பத்திற் சிறந்த ஜோதிடவல்லவர்கள் அதிதுரிதமாய் வந்து குழந்தை பிறந்த லக்கினத்தை ஆராய்ந்து, அவன் வயதைக்

கணக்கிட்டுப் பார்த்ததில், 56 தேயங்களையும் ஜெயித்து ஏகச் சக்காராதிபதியாய் அரசாளுவானென்றும், வேறுபாதொரு குறைவுமில்லையென்றும், இக்குழந்தைக்கு அழகேசன் என்று நாமகரணமிடவேண்டுமென்றும் சொல்லி, அரசனால் வேண்டிய வெகுமதிகள் பெற்று ஏகினர்.

இராஜ குமாரனுக்கு 5 வயதான பின்பு பெருமை மிகுந்த அவன் தந்தை அவனுக்கு வித்தியாரம்பஞ் செய்விக்க, மன துடையவராய், அறிவும், கலைஞானங்களும், நிறைந்தவருமாகிய உபாத்தியாயரிருக்கும் பள்ளியில் வைத்து, கல்விகற்கும்படி ஏற்படுத்தினர். அரசகுமாரன் சிலநாளையில் யானையேற்றம் குதிரையேற்றம், வில்வித்தை முதலிய பயிற்சிகளிலும் தன் ராஜாங்கத்துக் குரிய கல்விகளிலும் ப்ரபலமுடையவனானான். எழு வயதானதும் அழகேசன் என்பவன் தனது சிநேகிதனாகிய குணசீலனோடு, அடிக்கடி வேகமுடைய குதிரை யேறி, பட்டணத்தை விட்டகன்று, விசாலமுடைய ஒருவனத்தில் வேட்டையாடி ஏகோபித்து விளையாடி மகிழ்ந்திருப்பார்கள். இவிதமாக பத்து வருஷங்கள் கடந்தபின் நமது கதாநாயகனாகிய அழகேசனுக்கு பதினேழாவது வயதில் முடிசூட்டும் வைபவம் நடந்தது.

இது நடந்த சுமார் 6 மாதகாலமான பிற்பாடு, ஜயசீலர் பரமகதியடைந்தார். யாவரும் இதைப்பற்றி மிகவும் விசனப்பட்டார்கள். அழகேசன் தனது தந்தை இறந்ததைப்பற்றி மிகவும் விசனப்பட்டாலும் தனது ராஜ்யத்தில் ஒரு குறைவும் வாராமல்படிக்கு பாதுகாத்து ஜனங்களுக்கு வேண்டிய பொது நன்மைகளும் செய்துவந்தார். இவருக்கு அரசு பட்டம் உண்டானவுடன் பல தொல்லைகளாலும் தனது தகப்பனர் இறந்த விசனத்தாலும், தனது சிநேகிதனாகிய குணசீலனை மறந்துவிட்டார்.

இது நிற்க, ஒருநாள் அழகேசன் வேட்டைமேல் விருப்புற்று தனது சைனியங்களுடன் புறப்பட்டான். வழக்கம் போல் வேடர்கள் பல திசையில் அங்கு மிங்கும், ஓடவும் தூதர்கள் ஏகோபித்து முன்னேறிச் செல்லவும், பறைகளொலிக்கவும், ஒதை கொம்புகள் ஆரவாரிக்கவும், அரசன் வேட்டையாடி காடுகள் தோரும் சென்று வருகையில் எதிரே ஒரு அழகிய மான் நிற்கக்கண்டு, அதை பிடிக்க ஆவல்கொண்டு குதிரையை நடத்தினர். ஆனல் அது நமது அரசர்கைக்கு அகப்படாமல் துள்ளிப்பாய்ந்து நெடுந்தூரம் போய் மறைந்து விட்டது. இதனைக்கண்ட அரசன் மிகவும் வியப்புற்று, நிராசையுள்ள, ஆரணயத்தில் தனியாக நின்று, தாகத்தால் பிடிப்பட்டு, மிகவும் சோர்ந்து, தனது சைனியங்களைப் பார்த்தான். ஒருவரையும் காணேம். பக்கத்திலும் தண்ணீரைத் தேடி அலைந்து கிடையாமல் மிகவும் வியாகூலத்தோடு களைப்பினல் சோர்ந்து மரத்தடியில் மூர்ச்சையாய் விழுந்தான்.

இது நிற்க, அரசனது சைனியங்களும் வேடுவர்களும் தமது அரசனை அவ்வாரணிய முழுதும் தேடி, காணுது மிகவும் விபாகூலத்தோடு ராஜ்யத்துக்கு திரும்பினுர்கள். இவ்விதமிருக்க, நமது குணசீலன் ஆரண்ய மார்க்கத்தில் வேட்டையாடி திரும்பி வரும்வழியில் மரத்தடியில் அழகு சௌந்தர்யமுள்ள ஒரு புருஷன் விழுந்து கிடப்பதையும் குதிரை ஒன்று அவ்வாரண்யத்தில் மேய்ந்து கொண்டிருப்பதையும் பார்த்து ஆச்சரியமுற்று விரைந்து பக்கத்தில் வந்து யுவகனை உன்னிப் பார்த்து தனது சிநேகிதனுகிய அழகேசனென்று தெரிந்து மிகவும் விசனமுற்று தூக்கி எடுத்து மடியில் வைத்து சோபகளை யாற்றி, தனதிடமிருந்த எலுமிச்சங்கனிகளை அறுத்துக் கொடுத்து, தாகத்தை தணித்தான். தாகம் தணிந்ததும் தனது சிநேகிதனுகிய குணசீலனைக் கண்டு, மிகவும் வியப்புற்று இதுசமயம் என்னைக்காத்து ரட்சித்த உனக்கு என்ன உபகாரம் செய்வேனென்று சொல்லி, இருவரும் அளகாபுரியை நோக்கிப் புறப்பட்டார்கள். புறப்பட்டு வரும்போது, தொலைதூரம் வந்தகளைப்பினுலும், இருள் சமீபித்தபடியாலும், அவ்வாரணயத்தினோர் மாத்தடியில் படுத்து நித்திரை புரிந்தார்கள். மறுநாள் காலை அழகேசன் நித்திரையினின்றும் எழுந்து தனது பக்கத்தில்படுத்திருந்த சிநேகிதனுகிய குணசீலனைக் காணுது விசனமுற்று அவ்வாரணயத்தில் பல இடங்களிலும் தேடி அகப்படாது வியாகூலத்துடன் திரும்பிவரும் வழியில் ஒரு குடிசையினோரமாக காத்தில் விலங்குதரித்த ஒரு பெண்மணி குந்திக் கொண்டிருந்தாள்.

வடிவினில் இரதிமாதினையையும் லட்சுமியையும் பழிக்கத்தகுந்த ரூபலாவண்ய முற்றிருக்கின்ற பெண்ணை அழகேசன் கண்டு, "ஏ? மாதுசிரோன்மணியே நீ யார்? உன் கரத்தில் விலங்கு வந்த காரணம் என்ன! உன் ஊர், பேர் யாது?" என்று வினவ, "சுவாமி நீர் யாரோ, யானறியேனுகையால், நீர் இன்னுரென்று தெரிவிப்பீராகில் அதன் பின்பு என்விருத்தாந்தத்தை" உரைக்கின்றேனென்ருள். மாது இவ்விதம் கூறியதைக் கேட்ட அழகேசன் அப்பெண்ணைப்பார்த்து, கேளாய் மாதரசே, அளகாபுரி யென்னும் பட்டணத்துஅரசன், என் நாமதேயம் அழகேசன், இவ்வாரண்யத்தில் வேட்டையாடிப்புறப்பட்டு திரும்பிவரும் சமயம் உன்னைக்கண்டேன். ஆதலால் இனியாதொன்றுக்கும் பயப்படாமல் உனது சரித்திரத்தை தெரிவிப்பாய் என்று கூறினுன்.

அழகேசனுடைய முகத்தைப்பார்த்து நேரிழையாள் கூறுகின்ருள். "கேளும் சுவாமி சக்கரவர்த்தியாரே, நான் சண்புகாபுரமென்னும் பட்டணத்தை யாளப்பட்ட சந்திரகாச மகாராஜாவின் புத்திரி. என் நாமதேயம் மதனவல்லி என்று கூறுவார்கள். என் தந்தையானவர்

தினந்தோறும் வேட்டைக்குப்போய் வருவது வழக்கம். ஒரு நாள் வேட்டையாடப் போனவர் வழக்கம்போல் திரும்பிவாராததால், அன்று சாயரக்ஷை உப்பரிகையின்பேரில் தலைகோதிக்கொண்டிருந்த என்னை, ஒரு ராக்ஷதன் எடுத்துவந்து என் கரத்தினில் விலங்கைப் பூட்டிவிட்டு, 4-நாளைக்கொருதரம், என் கரத்தின் விலங்கைக்கழட்டித் தன்னை மணம் புரியும்படி மேன்மேலும் வேதனைவிளைவிக்கின்றான். மேலும் என்னைத் துன்பப்படுத்தி தூஷணமான சொற்களைப்பேசிவிட்டு, பின்பு மான் ரூபங் கொண்டுபோவது வழக்கமாயிருக்கிறானென்றும், ராக்ஷதன் வருவதற்குள் என்னை என் தகப்பனார் தேசத்திற்காவது அல்லது தங்கள் தேசத்திற்காவது கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டாள்.

அழகேசன் மேற்கூறியவற்றைக் கேட்டு, சினமடைந்து அப்பெண் மணியைப்பார்த்து, கேளாய் மதனவல்லியே, நீ இனியாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். ராக்ஷதன் வந்தவுடன், அவனிடம் போராடி, ஜெயித்து உன்னை இட்டுக்கொண்டு போகிறேனென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அப்பெண்மணியை எடுத்துவந்த ராக்ஷதன் விரைவாய் ஓடிவந்தான். உடனே அழகேசன் மிகவும் தைரியமாய், நீ யார், இப்பெண் மணியார்? இதன் வரலாற்றை ஆதியோடந்தமாக உண்மையாய் தெரிவி. இல்லாதவரை என் கைவாளுக்கு உன்னை இறையாக்குவேனென்று கூறினான். இராக்ஷதனைக்கிட்டும்போது, அந்த அகோர கோர ரூபமுள்ள ராக்ஷதனுக்கு கோபம் பிறந்து கர்ச்சித்து பக்கத்திலிராநின்ற ஒரு மரத்தைப்பிடுங்கி, ஓடிவரும்போது அரசகுமாரன் நிதானித்து, தனது வல்லமையால் ராக்ஷதனுடைய கையைவெட்டி, மயிரைப்பிடித்து அவனது சிரசை வெட்டும்போது பெரிய சத்தத்துடன் கீழேவிழுந்து ஆவியை ஒழித்தான்.

ராக்ஷதன் மரணமடைந்ததும் அழகேசன் மதனவல்லியை நோக்கி, "கேளாய்பெண்மணியே. இந்தப்பயல் ஒழிந்துவிட்டான். இனி நமக்குயாதொருதீங்கும் இல்லை. ஆகையால் உன்னை உன்தேசத்தில் கொண்டுபோய் சேர்த்துவிடுகிறேன்" என்றான். நான் சண்புகாபுரத்தரசன்குமார்த்தியாய்ப் பிறந்து அநேக துன்பங்களனுபவித்து, இது பரியந்தம் எனது கற்புக்கு பின்னம் வராமல்காத்து, இப்போது தங்களிடம் அகப்பட்டமையால் நீரே எனக்கு நாயகனுதமே தவிர, மற்றவரை விரும்பேன் என்று, மதனவல்லி ஓதிய சேதியை அழகேசன் கேட்டு, அப்பெண்ணுடன் அளகாபுரிக்குப் புறப்பட்டுப்போனான். அவ்விடம்போய் சேர்ந்து, தனது மந்திரிமார்களுக்கும், பிரதானிகளுக்கும், தான் வேட்டைக்குபோய் வந்ததினம் முதல் நடந்த சங்கதிகளை விபரமாகவும் குணசீலனைக்காணாது போன சங்கதியையும் குறித்து ஆதியோடந்தமாகச்சொல்லி தான்போன நாள்

முதலாக ராஜ்யத்தில் நடந்த காரியங்களை மந்திரியால் தெரிந்துகொண்டு தனது சிம்மாதனத்தில் வீற்றிருந்து அரசுபுரிந்துவந்தார்.

உடனே சண்புகபுரத்தரசனுக்கு அவன் புத்திரி க்ஷேமமாய் தன் இராஜ்யத்திலிருப்பதாக தெரியப்படுத்தினன். இது நிற்க, ஒரு வாரம் கழிந்து, குணசீலனைக்காவலாளிகள் கண்டு கூட்டிப்போய் அரசனிடம் விட்டார்கள். அழகேசன் தனது சிநேகிதனுகிய குணசீலனைக்கண்டு மிகவும் சந்தோஷத்தோடு கட்டி அணைத்து முத்தமிட்டு ஆரண்யத்தில் எனது பக்கத்தில் துயின்ற நீ, இதுகால பரியந்தம் எங்கு சென்றாய் என்று வினவினன்.

குணசீலன் அரசனைநோக்கி, எனதன்புக்குரிய சிநேகிதனே, நானனுபவித்ததை யெல்லாம் சொல்லப்போகிறதை கவனத்துடன் கேட்பாயாக என்று உறைக்கலுற்றான். உனது பக்கத்தில் நித்திரைபுரிந்த எனக்கு நித்திரைபிடியாமல், எழுந்து அவ்வாரண்யத்தைச் சுற்றிவரும்போது, எதிரில் ஒரு திருக்குளம் தோன்ற தாகவிடாய் தீர்த்துக்கொள்ளச் சென்றேன். அத்திருக்குளத்தில் ஒரு இரகசியவழிதென்பட்டது. அதனுள்போய்ப் பார்த்ததில், காளிகோவிலொன்றும், அக்கோவிலுள் "பூரண சந்திர உதயமோ" சந்தான் பாலுரையும சங்கரியோ "அல்லது விண்ணுலகத்தார் புகழும் மேனகையோ, என யாவரும் அதிசயிக்கும்படியாக சுமார் 18வயதுள்ள பெண் ஒருவள் தனது தாதிகளோடு கூடி, வீணை வாசிக்கக்கண்டு, மோகமுற்று, அறிவு தடுமாறி, தாதிபொருவளை கைகையால் அழைத்து, அவளை மணம் புரிய எனது எண்ணம் என்பதை அரசிக்கு தெரிவிக்கும்படி வேண்டினேன். அம்மாது என்னை அவிடமிருக்கும் ஒரு குளத்தில் முழுகிவரும்படி ஆஞ்ஞாபிக்க நான் அக்குளத்தில் முழுகினதும் உமது ராஜ்யத்திலிருக்கக்கண்டு மிகவும் ஆச்சர்யமுற்றிருந்தேன். அப்பொழுது உமது காவலாளிகள் என்னை, இங்கு கொண்டு வந்தார்களென்று சொல்லி முடித்தான்.

உடனே அரசன் எழுந்து அவ்வழியைக் காட்டும்படிக்கு நவில், உடனே இருவரும் மேற்சொன்ன கானகத்திற்கு சென்று, திருக்குளத்தின் இரகசிய வழியாக போனபோது அப்பெண் மணியானவள் அழகேசனைக்கண்டு அன்புற்று, தன் அறிவுகலங்கி நிற்கும்போது, அழகேசன் யுவதியைப் பார்த்து, பெண்ணே நீயார் உனது பெற்றோர் யாவர் என்று வினவ, அப்பெண்மணியானவள் அரசனைப்பார்த்து தானிருப்பது ஞானகலிங்கபுரமென்னும் பட்டணத்து அரசியென்றும், என் நாமதேயம் குணபூஷணியென்றும், இவ்விடம் உல்லாசமாய்வந்து போவதாகவும் சொல்லி, தங்களைப்பார்த்தவுடனே என்மனது தங்கள்பாற் சென்றுவிட்டது ஆதலால் தாங்களே எனக்கு நாயகனென்று உரைத்து நமஸ்காரம் செய்து நின்ற

குணபூஷணியைப் பார்த்து, அழகேசன் கூறுகிறான். கேளும் மாதே, இவர் எனது ஆப்த நண்பர், இவர் உன்னைக் கண்டு பிரியப்பட்டபடியால், யாதொரு பதிலும் இயலாமல் இவரை உனது நாயகனாக கொள்ள வேண்டுமென்று உரைக்க, குணபூஷணி அக்கருத்துக்கு இசைந்ததை அறிந்த அழகேசன் தனது சிநேகிதனோடும், அரசியோடும் நாகலிங்கபுரம் போய், குணசீலனுக்கும் குணபூஷணிக்கும் விவாகம் அதிவிமரிசையாய் நடப்பித்து, ஷியார்களிடம் விடைபெற்று தனது பட்டணம் வந்து தாயார் லீலாவதியின் ஏற்பாட்டின்படி மதனவல்லியை மணஞ் செய்ய ஒரு மங்களதினம் குறிக்கப்பட்டு, குணசீலனுக்கும் மதனவல்லியின் பெற்றோர்களுக்கும் இன்னும் மற்ற அரசர்களுக்கும் அழைப்பு திருமுகங்கள் அனுப்பப்பட்டன. சூரியனும் நாணும்படி அரண்மனையை அலங்கரித்து பூதானம் கோதானம் யாவும் வழங்கப்பெற்று சகலஜனங்கள் கண்ணும் கருத்தும் கண்டு களிக்க அழகேசனுக்கும், மதனவல்லிக்கும் விவாகமகோற்சவத்தை அதிசம்பிரமாக நடத்தினர்.

மதனவல்லியின் பெற்றோர்கள் தனது குமார்த்தியைக்கண்டு சந்தோஷமுற்று தனது மருமகனாகிய அழகேசனுக்கு வேண்டிய சீதனங்கள், கொடுத்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஆசீர்வதித்து ஏகினர். சதிபதிகளாகிய மதனவல்லியும் அழகேசனும் பூவிற் பொருந்திய மணம் போல களங்கமற்ற நேசம்பூண்டவர்களாய், 56 தேயங்களையும் ஜெயித்து ஏகசக்கிராதிபதியாய் சிம்மாதனத்தில் வீற்றிருந்து, இனிதுசுகித்து வாழ்ந்திருந்தனர். சுபம்.

T. S. முருகநாதன்.

---

# பூர்வீக இந்தியமாதர்கள்.

1. கார்க்கி:—பரமஹம்சரைப்போல் உலகமுழுவதும் சுற்றித்திரியும் கலியாண மில்லாதவர். பிரஹதாரண்ணிய உபநிஷத்தில் இவர் யாக்ஞவல்கியர் ஜனக மகாராஜனது சபையில் பசுக்களைக் கடத்தியபோது பஹிரங்கமாகக் கேள்விகேட்டவர் என்று சொல்லப்படுகிறது (இந்தக்கேள்விகளைப் பற்றி சமயம் வாய்ந்தபோது குறிப்பிடப்படும்).

2. மைத்திரேயி:—யாக்ஞவல்கியரின் பாரியைகளிலொருவர் பர்த்தா காலம் நெருங்கிய பொழுது, தன் செல்வத்தில் பாதியை எடுத்துக் கொள்ளும்படி சொன்னதனால் மோக்ஷசாதன முண்டோ வென்று கேட்க, இல்லை என்று சொன்னதின்பேரில் அதன் வழியைக்கேட்டு மோக்ஷமடைந்தாள்.

3. சுலவ:—பிரதவ அரசன் குமாரி. தன்னைவிட வித்தையிலும், கற்பிலும் உயர்ந்தாரைப்பார்க்கக் கூடாமையால் கன்னிகையாகவே இரு

க்க நேர்ந்தது. பிறகு பரமஹம்சராகப்பெற்று இடங்கள்தோறும்சஞ்சரித்து பிரமானந்தத்தை யடைந்து வந்தார். ஜனகமகாராஜனது அவையைய டைந்து, ஒருகாலத்து அவருக்கு பிரமத்தை யடையு முபாயத்தையும், அரசுமுறைமையும் போதித்தார். அவரைப்பற்றி மகாபாரதத்தில்சாந்திபருவத்தில் பின்வருமாறு காணப்படுகிறது. சுலவ என்னும் கன்னிகையார் மற்றத் தன்னைப்போலொத்தசந்நியாசிகள் ஜனகமகாராஜனை மிகவும் சிலாகித்துப் பேசியதுகண்டு, அவரைப்பார்க்க ஆசையுடையவராகத் தனது ரூபத்தை மாற்றிக்கொண்டு யோகாப்பியாசத்தால் யௌவனமும் ரூபலாவண்ணியமுமுடையவளாக ஜனகனது சபையடைந்தகாலத்து மகாராஜன் வழிபட்டு ஆசனத்திருத்திவழிபட.......

4 கலாவதி:—காசிராஜனது புத்திரி துர்வாச முனிவரின் தொண்டர். ஸ்காந்தம் பிரமோத்தர காண்டத்தில் அதிக பாண்டித்தியமுடையவளென்று கூறப்படுகிறது.

5. வேதவதி:—குஷத்துவராஜனின் புத்திரியாய், மணமின்றி யோகாப்பியாசம் செய்துகொண்டு யோகாக்கினி மூலமாகமோக்ஷத்தை யடைந்தாள். வால்மீக ராமாயணம் உத்தரகாண்டம் 17வது சர்க்கத்தில் மேற்படியாரைப்பற்றிப் பின்வருமாறு சொல்லப்படுகிறது. "அங்கே அந்தக் கன்னிகை (வேதவதி)யை சடை மரவுரியுடனும் ரிஷியைப் போலவும் தேவர்களைப்போல சுந்தரமாகவும் கண்டார்." அன்றியும் தேவிபாகவதம் ஒன்பதாவது ஸ்கந்தம் பதினைந்து பதினாறுவது அத்தியாயங்களிலும் காணப்படுகிறது.

6. அம்பா:—மணமின்றி தபஸ் வினியாகவே இருந்தார். "அந்த அம்மணி கூட, ஆமகாராஜனே, யமுனைக்கரையை யடைந்து கடுந்தவம் புரிந்தவள்" என்று மகாபாரதம் உத்தியோகபருவம் நூற்றுத் தொண்ணூற்றேழாம் அத்தியாயத்தில் காணப்படுகிறது.

7, 8. வாயுனா, தாரணி:—பாகவதம் நான்காம் அத்தியாயம் முதல் சுலோகத்தில் இந்த இருசகோதரிகளும் கன்னிகா பிரும வாதினிகளாகவிருந்து யோகத்திலும், கல்விமூலமாகவும் சித்தியடைந்தவர்களென்று காணப்படுகிறது.

9. மதால்சா:—கர்மயோகத்தில் சுவர்க்காஜன் தேர்ச்சியடைந்த போது அவன் தகப்பன் வானப் பிரஸ்தத்தையடைய விரும்பி மகனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வனத்திற்கு ஏகுங்கால், அவன் தாயாகிய மதால்சா என்பவள் தன் புத்திரனிடத்தில் ஒரு மோதிரத்தைக் கொடுத்து "நீ சிநேகாது விலக்கிலிருந்தாவது திரவிய நஷ்டத்தாலாவது அபாயத்தாலாவது துக்கமடையும்படி நேரிட்டால், இம்மோதிரத்தை உடைத்துப் பார்ப்பாயாகில் இதில் அபூர்வமான திரவிய மிருக்கக்காண்பாய்" என்று சொல்லிக்கொடுத்தாள்.